# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 14,543 — 1965 ඔක්තෝබර් 26 වැනි අඟහරුවාද — 1965.10.26

14,543 ம் இலக்கம்—1965 ம் ஆண்டு ஒற்ரோபர் மாதம் 26 ந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)—பொது

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறுகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.]

## அரசாங்க அறிவித்தல்கள்

### அறிவித்தல்

#### தொலைபேசிச் செய்திகளெனக் குறிப்பிடப்படும் செய்திகள் சட்டவிரோதமான ஒட்டுக்கேட்டல்

அரசாங்க கட்டுவேலைகள், தபால் தந்திப் போக்குவரத்து அமைச்சர் வால்டர் ஜோவரி மொன்ரேகு ஜெயவிக்கிரமா ஆகிய நான், அரசாங்கக் கட்டுவேலைகள் தபால், தந்திப் போக்குவரத்து அமைச்சின் நிரந்தரச் செயலாளராகிய திரு. ஜி. பி. தம்பையா ஆகிய உங்களைப் பின்வரும் நோக்கங்களுக்கென இவ் வறிவித்தல் மூலம் நியமிக்கிறேன்.

(1) 1960 ஜனவரி 1 ம் தேதியிலிருந்து 1965 செப்டம்பர் 30 ம் தேதிவரையுள்ள காலத்தில் தொலைபேசித் தொடர்புகளுக்கென இலங்கையில் அரசாங்கத்தினுல் தாபிக்கப்பட்டும் பரிபாலிக்கப்பட்டும் இயக்கப்பட்டும் வரும் (அரசாங்க தொலைபேசி சேவை எனக் குறிப்பிடப்படும்) சேவைகளினுல் அல்லது அவற்றின் மூலம் அனுப்பப்பட்ட அல்லது செலுத்தப்பட்ட (தொலைபேசிச் செய்திகளெனக் குறிப்பிடப்படும்) செய்திகள் சட்டவிரோதமான ஒட்டுக் கேட்டலுக்கு உட்படுத்தப்பட்டனவா எனவும் அங்ஙனமாயின்

(அ) அத்தகைய சட்ட விரோதமான ஒட்டுக் கேட்டல் எவ்வழிகளினுல் அல்லது எம்முறைகளினுல் செயற்படுத்தப்பட்டது எனவும், குறிப்பாக அத்தகைய சட்டவிரோதமான ஒட்டுக்கேட்டலைச் செயற்படுத்தும் நோக்கத்துக்கென, அரசாங்க தொலைபேசி சேவைக்கென ஏற்பாடு செய்யப்பட்ட வளவுகள் எத்துணையளவுக்குப் பயன்படுத்தப்பட்டன அல்லது உபகரணங்கள் தவருக உபயோகிக்கப்பட்டன எனவும் ;

(ஆ) அத்தகைய சட்டவிரோதமான ஒட்டுக்கேட்டல் எத்துணையளவுக்குத் தந்திப் போக்குவரத்துப் பகுதி உத்தியோகத்தர்கள், வேறு அரசாங்க உத்தியோகத்தர், அல்லது பொதுமக்களுள் எவரேனும் ஆட்கள், என்போரால்–அவர்கள் தங்கள் உடலுழைப்பின் மூலம் அல்லது வேறெவ்வகையாகவேனும்–வழங்கப்பட்ட அல்லது கொடுக்கப்பட்ட உதவி சூட்சி அல்லது ஒத்தாசை கொண்டு கையாளப்பட்டது எனவும், அத்தகைய உத்தியோகத்தர்களின் அல்லது ஆட்களின் பெயர்கள் யாவை எனவும் ;

(இ) ஆட்கள் எவராலும் அத்தகைய சட்டவிரோதமான ஒட்டுக்கேட்டலுக்குட்படுத்தப்பட்ட தொலைபேசிச் செய்திகளின் விஷயங்கள் அவரால் எத்துணையளவுக்குப் பிறருக்கு வெளியிடப்பட்டன எனவும், அவ்விதம் வெளியிடப்பட்ட விஷயங்களை வெளிவிட்டவர்களின் பெயர்களும், வெளிவிடப்பட்டவர்களின் பெயர்களும் யாவை எனவும் ;

விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கும் ;

(2) எதிர் காலத்தில் பொது மக்களின் நலனுக்காக அத்தகைய செய்தியின் கண்ணமைந்த விஷயங்கள் தொடர்பில் இரகசியத்தினைப் பேணவேண்டி அவ்விஷயத்தினைக் கருதி அத்தகைய சட்டவிரோதமான ஒட்டுக்கேட்டலைத் தவிர்ப்பதற்கு, விசாரணையின் பயனுக நீர் தேவையானவை என எண்ணும், குறிப்பாக தந்திப் போக்குவரத்து உத்தியோகத்தர்கள், வேறு அரசாங்க உத்தியோகத்தர்கள் வேறு ஆட்கள் என்போரால் தொலைபேசிச் செய்திகளை ஒட்டுக்கேட்டல், அத்தகைய செய்திகளின் விஷயங்களை வெளிவிடுதல் என்பவற்றை உட்படுத்திய குற்றங்களுக்கு கூடிய பாரதூரமான தண்டனைகளை விதித்தற்கான ஏற்பாடுகள் உட்பட அரசாங்க தொலைபேசிச் சேவைக்கேற்புடையதான சட்டம், வழக்கம், நடைமுறையென்பன பற்றியும் அத்தகைய சிபார்சுகளை செய்வதற்கும் ;

தொலைபேசிச் செய்திகளைச் சட்ட விரோதமாக ஒட்டுக்கேட்டதற்கு அல்லது அவ்விதம் சட்டவிரோதமாக ஒட்டுக்கேட்பதற்கு உதவி, அல்லது சூட்சி அல்லது ஒத்தாசை புரிந்ததற்கு அல்லது செய்ததற்கு அல்லது அவ்விதம் சட்டவிரோதமாக ஒட்டுக்கேட்டு தொலைபேசிச் செய்திகளை வெளிவிட்டதற்கு குற்றவாளியாக நீவிர் காணும் தந்திப்போக்குவரத்து உத்தியோகத்தர் வேறு அரசாங்க உத்தியோகத்தர்கள், பொதுமக்களுள் எவரேனும் ஆட்கள் என்போருக்கு எதிராக எடுக்கப்படவேண்டிய நடவடிக்கையை எனக்குச் சிபார்சு செய்யுமாறு மேற்சொல்லப்பட்ட திரு. ஜி. பி. தம்பையா ஆகிய உங்களை, இத்தால் பணிக்கிறேன்.

மேலே சொல்லப்பட்டனவும் அவைபோன்றனவுமான விஷயங்கள் பற்றி உங்களுக்குத் தேவையானவை என நீவிர் கருதும் அத்தகைய எல்லா விஷயங்களையும் விசாரணைகளையும் செய்யுமாறும் ஆராய்வுகளை நடாத்துமாறும் இத்தால் மேற்சொல்லப்பட்ட திரு. ஜி. பி. தம்பையா ஆகிய உங்களுக்கு அதிகாரமளிப்பதுடன், உங்கள் கைப்பட அவற்றின்மீது ஒரு அறிக்கையைக் கூடியளவு சுணக்கமின்றி அனுப்பிவைக்குமாறும் பணிக்கிறேன்.

மேலும், உங்கள் விசாரணைகளினதும் ஆராய்வுகளினதும் நோக்கங்களுக்கென மேற்சொல்லப்பட்ட திரு. ஜி. பி. தம்பையா ஆகிய உங்களுக்குத் தேவையான உதவிகளுக்காக அல்லது விபரங்களுக்காக அதன் பொருட்டு முறைப்படி கொடுக்கப்படக்கூடிய அல்லது வழங்கப்படக்கூடிய அத்தகைய உதவிகளையும் விபரங்களையும் அளிக்குமாறு—

(அ) எல்லா அரசாங்க உத்தியோகத்தர்களையும் பணிப்பதுடன்,

(ஆ) அரசாங்க உத்தியோகத்தர் தவிர்ந்த ஏனையோர் எல்லோரையும் வேண்டுகிறேன்.

இவ் அறிவித்தலின் நோக்கங்களுக்கென—

(அ) " சட்டவிரோதமான ஒட்டுக்கேட்டல் " என்னும் கூற்று தொலைபேசிச் செய்தி ஒன்றன் தொடர்பில் வருமிடத்து,

(i) ஏதேனும் எழுத்திலுள்ள நியாயப்பிரமாணத்தினால் அல்லது அதன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழன்றி வேறு விதமான ; அல்லது

(ii) அவ்விதம் வழங்கப்பட்டதாகக் கொள்ளப்படும் அதிகாரத்தின் கீழன்றி வேறுவிதமான,

ஏதேனும் செயல் அல்லது காரியத்தின் மூலம் ஒட்டுக்கேட்டல் எனப் பொருள்படும் ;

(ஆ) " தந்திப் போக்கு வரத்து உத்தியோகத்தர்." என்பது, (192 ம் அத்தியாயமான) தந்திப் போக்குவரத்துக் கட்டளைச் சட்டத்தின் பொருளுக்கமைவுள்ள எவரேனும் தந்திப் போக்குவரத்து உத்தியோகத்தர் எனப் பொருள்படுவதோடு முன்னைய தந்திப் போக்கு வரத்து உத்தியோகத்தர் ஒருவரையும் உள்ளடக்கும்.

டப்ளியு. ஜீ. மொன்ரேகு ஜெயவிக்கிரமா,
அரசாங்க கட்டுவேலை, தபால் தந்திப்போக்குவரத்து அமைச்சர்.

1965 ம் ஆண்டு ஒக்டோபர் மீ 25 ந் உ.

10–1184

இலங்கை வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்தி செய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.